# RK TUITION CENTRE – KUMBAKONAM

| பத்தாம் வகுப்பு தமிழ் | தேர்வு – 3 | மதிப்பெண் : 50<br>நேரம் : |
| --- | --- | --- |

பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7 X 1 = 7**

1. ‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’ என்னும் அடியில் பாக்கம் என்பது?
(அ) புத்தூர் (ஆ) மூதூர் (இ) பேரூர் (ஈ) சிற்றூர்
2. ‘விருந்தினரைப் பேணுவதற்கு பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு’. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை-
(அ) நிலத்திற்கேற்ற விருந்து (ஆ) இன்மையிலும் விருந்து
(இ) அல்லிலும் விருந்து (ஈ) ஊற்றாரின் விருந்து
3. பின்வருவனவற்றுள் முறையான தொடர்?
(அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
(ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
(இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு
(ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு
4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது?
(அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்
5. ‘பாடி மகிழ்ந்தனர்’ எனும் தொடரில் ‘பாடி’ என்பது?
(அ) முற்று (ஆ) எச்சம் (இ) முற்றெச்சம் (ஈ) அனைத்தும்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

‘அன்று அவன் அசைஇ அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒன்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி’

6. இப்பாடலின் ஆசிரியர் யார்?
(அ) அதிவீரராம பாண்டியன் (ஆ) பெருங்கௌசிகனார் (இ) நன்னன் (ஈ) நப்பூதனார்
7. இப்பாடலில் வரும் **‘அல்’** என்பதன் பொருள்?
(அ) துன்பம் (ஆ) இரவு (இ) பகல் (ஈ) நெருப்பு

பகுதி – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**
**(10வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

8. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
9. ‘தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி’ என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்று? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
10. ‘விருந்தினனாக ஒருவன்’ எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**

11. ‘எழுது என்றான்’ என்பது விரைவு காரணமாக ‘எழுது எழுது என்றான்’ என அடுக்குத்தொடரானது, ‘சிரித்துப் பேசினார்’ என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?
12. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112

R. Karthi M.Sc.B.Ed.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

# RK TUITION CENTRE – KUMBAKONAM

பகுதி – 3

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

14. விருந்தோம்பல் குறித்து காசிக்காண்டம் கூறும் செய்திகளை விளக்குக.
15. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப் படுத்தலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகிறது?

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

16. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப்பொருட்கள் யாவை?
17. தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

18. பெயர் மற்றும் வினையெச்சத் தொடர்களை விளக்குக.
19. இடை மற்றும் உரிச்சொல் தொடர்களை விளக்குக.

பகுதி – 4

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**

20. மொழிபெயர்க்க.

    Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil the culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, and England worldwide. Though out culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

www.Padasalai.Net



22. நயம் பாராட்டுக.

    "கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
    அத்த மிக்கும் போது அரிசிவரும் - குத்தி
    உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
    இலையிலிட வெள்ளி எழும்" – காளமேகப்புலவர்

பகுதி – 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 X 6 = 18**

23. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.
24. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்களைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க.
25. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112
R. Karthi M.Sc.B.Ed.